Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 54/2023 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 16 |
| | | Defence |
| | | Court |

| | |
|---|---|
| Name | : ராம் நாராயணன் |
| Father / Husband Name | : பழனிமுத்து |
| Village | : மதுரை |
| Taluk | : மதுரை |
| Caste | : |
| Calling | : காவல் ஆய்வாளர் |
| Religion | : |
| Age | : 53 |

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 25.11.2025

**முதல் விசாரணை :-**

1. நான் தமிழக காவல்துறையில் ஆய்வாளராக பணியாற்றி

வருகிறேன். தற்போது பணியிடை நீக்கத்தில் உள்ளேன். கடந்த 2022 ம் ஆண்டு நரிக்குடி வட்ட ஆய்வாளராக பணியாற்றினேன். கடந்த 24.10.2022 ம் தேதி வீரசோழன் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் பாபு என்பவரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண் 66/2022, ச/பி. 174 குவிமுச (சந்தேக மரணம்) வழக்கினை அதிகாலை 3.45 மணிக்கு என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு அதிகாலை 4.15 மணியளவில் சென்று சாட்சிகள் பாண்டியராஜ், மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் டார்ச் லைட் மற்றும் பெட்டர்மாஸ் லைட் வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். சம்பவ இடமான வீட்டை சுற்றியுள்ள பகுதிகளை வரைபடம் வரைந்தேன். **அந்த வரைபடம் அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் சம்பவம் நடந்த வீட்டின் உள்பகுதியை தனியாக வரைபடம் தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். **அந்த வரைபடம் அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு காலை 5.15 மணிக்கு சம்பவ இடத்தில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஒரு அத்தாட்சி (அ.த.சா.ஆ.4) தயார் செய்து சம்பவ இடத்திலிருந்த சுவற்றிலிருந்து சுரண்டி எடுத்த இரத்தம் பட்ட காரை மண் சிறிதளவு, இரத்தம் படாத காரை மண் சிறிதளவு ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேற்படி இரண்டு சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.10.2022 அன்று காலை 8.00 மணிக்கு விருதுநகர் அரசு மருத்துவமனை சென்று பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 8.00 – 9.30 மணி வரை இறந்துபோன முத்துக்குமாரின் சடலத்தின் மீது பிரேத விசாரணை செய்தேன். **நான் மேற்கொண்ட பிரேத விசாரணை அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**.

3. பின்பு முதுநிலை காவலர் 1814 ரத்தினக்குமார் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். சாட்சிகள் நாகலட்சுமி, ஆனந்தகுமார், சின்னபிள்ளை மற்றும் ஆனந்த் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 26.10.2022ம் தேதி காலை 9.30 மணிக்கு இறந்துபோன முத்துக்குமாரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த உதவி பேராசிரியர் மருத்துவர் சுதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தில் அவர் இறந்துபோன முத்துக்குமார் தானாக சுவற்றில் முட்டி அதனால் மரணம் ஏற்படவில்லை என்று கூறினார். அதன் அடிப்படையில் சந்தேக மரணம் வழக்கை சட்டப்பிரிவு 302 இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.த.சா.ஆ.9) தயார் செய்து திருச்சுழி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

4. அன்றைய தினம் 13.00 மணிக்கு மினாக்குளம் கிராம நிர்வாக அலுவலர் காளிமுத்து மற்றும் கிராம உதவியாளர் லட்சுமி ஆகியோர் இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட கலா என்பவருடன் நரிக்குடி காவல்நிலையத்தில் ஆஜரானார்கள். கிராம நிர்வாக அலுவலர் காலை 11.30 மணிக்கு மினாக்குளம் கிராம நிர்வாக அலுவலகத்தில் வந்து இவ்வழக்கின் எதிரி கலா ஆஜராகி ஒரு வாக்குமூலம் அவரிடம் அளித்துள்ளார். அதனடிப்படையில் காலை 13.30 மணிக்கு மேற்படி எதிரி கலாவை கைது செய்தேன். 13.45 மணிக்கு மேற்படி எதிரி கலா தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் (அ.த.சா.ஆ.6). அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் காளிமுத்து மற்றும் கிராம உதவியாளர் லட்சுமி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன்.

5. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கலா என்னை கூட்டிச் சென்றால் என் கணவர் முத்துக்குமாரை கொலை செய்ய பயன்படுத்திய களைக்கொத்தி ஒன்றையும், இரத்தக்கறையுடன் கூடிய இளம்பச்சை நிற பூ போட்ட சேலை ஒன்றையும் ஆஜர்படுத்துவதாக கூறினார். பின்பு 15.30 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஒரு அத்தாட்சி (அ.த.சா.ஆ.7) தயார் செய்தேன். அந்த அத்தாட்சியில் சுமார் 61.5 செமீ நீளமுள்ள மரக்கட்டையுடன் கூடிய அதன் கீழ் சுமார் 10 செமீ அகலமும், 11.5 செமீ நீளமும் கொண்ட வெட்டு பகுதியுடன் கூடிய மற்றும் இரும்பிலான வளையத்துடன் கூடிய இரத்தக்கறை கொண்ட களைக்கொத்தி (சா.பொ.1) ஒன்றையும், இரத்தக்கறையுடன் கூடிய இளம்பச்சை நிறம் கொண்ட பூ போட்ட சேலை (சா.பொ.2) ஒன்றையும் கைப்பற்றினேன். மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6. பின்பு எதிரியை 16.30 மணியளவில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வேண்டி கனம் திருச்சுழி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கில் இறந்துபோன முத்துக்குமார் அணிந்திருந்த கருப்பு, வெள்ளை, சிவப்பு பார்டர் கொண்ட இரத்தக்கறை படிந்த வெள்ளை வேஷ்டி ஒன்றையும், இரத்தக்கறை படிந்த வெள்ளை நிற முண்டா பனியன் ஒன்றையும், பிரவுன் கலர் SKC டவுசர் மாடல் ஜட்டி ஒன்றையும், பிரேத பரிசோதனைக்கு நியமிக்கப்பட்ட காவலர் முநிகா 1814 ரத்தினக்குமார் நிலையத்தில் ஆஜர்படுத்த அதனை படிவம் 95 ல் கைப்பற்றினேன். **அந்த படிவம் 95 அ.த.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இறந்துபோன முத்துக்குமார் அணிந்திருந்த **கருப்பு, வெள்ளை, சிவப்பு பார்டர் கொண்ட இரத்தக்கறை படிந்த வெள்ளை**

**வேஷ்டி ஒன்று சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இரத்தக்கறை படிந்த வெள்ளை நிற முண்டா பனியன் ஒன்று **சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரவுன் கலர் SKC டவுசர் மாடல் ஜட்டி ஒன்று **சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் சம்பவ இடத்திலிருந்து சுவற்றிலிருந்து சுரண்டி எடுத்த இரத்தம் பட்ட காரை மண் சிறிதளவு **சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இரத்தம் படாத காரை மண் சிறிதளவு **சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (சா.பொ.6 மற்றும் 7 ஆகியவை தடய அறிவியல் பரிசோதனைக்கு பின்னர் உள்ள மீதமான மண் சான்று பொருட்களாக குறியீடு செய்யப்படுகிறது).

7. 27.10.2022 அன்று சாட்சிகள் கதிரேசன் மகன் முத்துக்குமார், ஜோதி முருகன், பிரபு, ஞானசேகர், முத்தையா மகன் முத்துக்குமார், அழகேஷ் (எ) அலெக்ஸ் பாண்டியன், பாண்டி (எ) பாண்டியராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.11.2022 அன்று இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட இரத்தக்கறை படிந்த களைக்கொத்தி -1 (சா.பொ.1), இரத்தக்கறையுடன் கூடிய இளம்பச்சை நிறம் கொண்ட பூ போட்ட சேலை (சா.பொ.2) ஒன்றையும், கருப்பு, வெள்ளை, சிவப்பு பார்டர் கொண்ட இரத்தக்கறை படிந்த வெள்ளை வேஷ்டி ஒன்றையும் (சா.பொ.3), இரத்தக்கறை படிந்த வெள்ளை நிற முண்டா பனியன் ஒன்றையும் (சா.பொ.4), பிரவுன் கலர் SKC டவுசர் மாடல் ஜட்டி ஒன்றையும் (சா.பொ.5), சம்பவ இடத்திலிருந்து சுவற்றிலிருந்து சுரண்டி எடுத்த இரத்தம் பட்ட காரை மண் சிறிதளவையும் (சா.பொ.6) மற்றும் இரத்தம் படாத காரை மண் சிறிதளவையும் (சா.பொ.7) ஆகிய வழக்கு சொத்துக்களை தடய அறிவியல் துறை, இராமநாதபுரத்திற்கு பரிசோதனைக்காக முநிகா 1814 ரத்தினக்குமார் என்பவர் மூலம் நீதிமன்றத்தின் வாயிலாக அனுப்ப வேண்டி வேண்டுகோள்

கடிதம் கொடுத்தேன். 25.11.2022 அன்று நீதித்துறை நடுவரின் கடிதத்துடன் வழக்கு சொத்துகளை மேற்சொன்ன காவலர் மூலம் பரிசோதனைக்காக தடய அறிவியல் துறை, இராமநாதபுரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

8. 25.11.2022 அன்று இவ்வழக்கின் சாட்சிகளான நாகலட்சுமி, ஆனந்தகுமார் ஆகியோரிடம் இரகசிய வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டி கனம் நீதித்துறை நடுவர், திருச்சுழி அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் அடிப்படையில் 30.11.2022 அன்று நீதித்துறை நடுவர், திருச்சுழி அவர்கள் மேற்சொன்ன இரு சாட்சிகளிடமும் இரகசிய வாக்குமூலத்தை பதிவு செய்தார். 22.12.2022 அன்று இவ்வழக்கில் இறந்துபோன முத்துக்குமாரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சுதன் என்பவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் உள் உறுப்புகளை பகுப்பாய்வு செய்து தடய அறிவியல் துறையினர் வழங்கிய அறிக்கையை பெற்று அதனை பரிசீலித்த மருத்துவர் இறந்த நபர் அதிகப்படியான இரத்தபோக்கின் காரணமாகவும், கொடுங்காயத்தின் காரணமாகவும் இறந்துவிட்டார் என சான்றளித்துள்ளார். அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

9. இராமநாதபுரம், தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து இவ்வழக்கு தொடர்பான பகுப்பாய்வு முடிவுகள் தயாராக உள்ளதாக கூறியதன் அடிப்படையில் முநிகா 1814 ரத்தினக்குமார் என்பவரை நியமித்து நீதிமன்றத்திலிருந்து அதிகார கடிதத்தை பெற்று மேற்சொன்ன முதல்நிலை காவலர் இராமநாதபுரம், தடய அறிவியல் ஆய்வகத்திற்கு சென்று பகுப்பாய்வு அறிக்கைகளை பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தார். வழக்கு சொத்துகளை பகுப்பாய்வு செய்த இளநிலை அறிவியல் அலுவலர்களான திரு.தங்கவேல், திரு.வெங்கடேஸ்வரன் ஆகியோரை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அவர்கள் வழங்கிய 30.11.2022 தேதியிட்ட பகுப்பாய்வு அறிக்கைகள் RMD/BIOL.605/2022, RMD/BIOL.606/2022 மற்றும் RMD/TOX.H.1544/2022 முறையே நீ.ம.சா.ஆ.1. நீ.ம.சா.ஆ.2 மற்றும் நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. முநிகா 1814 ரத்தினக்குமார், பெண் தலைமை காவலர் 1475 கவிதா, காவலர் 3835 ஜெயக்குமார், சார்பு ஆய்வாளர் பாபு ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 24.12.2022 அன்று என் விசாரணை முடித்து இவ்வழக்கின் எதிரி கலா என்பவர் மீது இதச 302 ன் கீழ் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன். வழக்கின் இறுதி அறிக்கை தாக்கல் செய்த பின்னர் மதுரையிலுள்ள தடய அறிவியல் துறையினரால் பகுப்பாய்வுக்கு பின் வழங்கப்பட்ட **22.02.2023 தேதியிட்ட MDU/SER.RM/430/2022 (MDU/SER.RM/431/2022) நீ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

11. வழக்கு கோப்பை விசாரணைக்கு பெறுவதற்கு முன்னர் இரவு 11.00 மணியளவில் உதவி ஆய்வாளர் பாபு அவர்கள் மினாக்குளம் கிராமத்தில் ஒரு இறப்பு ஏற்பட்டுள்ளதாக எனக்கு தகவல் கொடுத்தார். வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் பாபு அவர்கள் எத்தனை மணிக்கு எந்த இடத்தில் வைத்து என்னிடம் கொடுத்தார் என்று வழக்கு கோப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், வழக்கு கோப்பை என்னிடம் அ.சா.15 உதவி ஆய்வாளர் பாபு அவர்கள் வீரசோழன் பேருந்து நிலையத்தில் வைத்து அதிகாலை 3.30 மணியளவில் கொடுத்தார். நான் வழக்கு கோப்பை பெற்றவுடன் முதல் தகவல் அறிக்கையை படித்துப் பார்த்தேன். புகாரில் இறந்த நபரின் இறப்பு குறித்து எவ்வித சந்தேகமும் இல்லை என

குறிப்பிட்டு தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. நான் வீரசோழன் பேருந்து நிறுத்தத்திலிருந்து சம்பவ இடத்திற்கு சுமார் 30 நிமிடங்களில் சென்று விட்டேன். என்னுடைய விசாரணையில் வீரசோழன் காவல்நிலையத்தை சேர்ந்த போலீசார் சம்பவ இடத்திற்கு 23.10.2022 அன்று இரவு 9.30 மணிக்கு சென்றதாக தெரியவரவில்லை. 23.10.2022 அன்று இரவு நேரத்தில் மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் வீரசோழன் காவல்நிலையத்திற்கு வந்தாரா என்று என் விசாரணையில் தெரியவரவில்லை. நான் சம்பவ இடத்திற்கு 24.10.2022 அன்று அதிகாலை 4.15 மணியளவில் சென்ற போது இறந்த முத்துக்குமாரின் சடலம் எங்கிருந்தது என்றால் நான் செல்வதற்கு முன்பாகவே உதவி ஆய்வாளர் பிரேதத்தை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார். உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்று பிரேதத்தை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அனுப்பி வைத்து விட்டு என்னிடம் வழக்கு கோப்பை வீரசோழன் பேருந்து நிறுத்தத்தில் வைத்து அதிகாலை 3.30 மணிக்கு ஒப்படைத்தார். உதவி ஆய்வாளர் பாபு பிரேதத்தை ஆம்புலன்சில் அனுப்பி வைத்து விட்டு தன்னுடைய இருசக்கரவாகனத்தில் என்னிடம் வீரசோழன் பேருந்து நிறுத்தத்திலிருந்து வழக்கு கோப்புகளை ஒப்படைத்து விட்டு இந்த வழக்கு தொடர்பாக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அதிகாலை சுமார் 4.00 மணியளவில் சென்றுள்ளார்.

13. அ.சா.1 தனது இந்நீதிமன்ற விசாரணையில், எங்கள் காவல் நிலையத்திலிருந்து வீரசோழன் போலீசார் சம்பவ இடத்திற்கு இரவு 9.30 – 10.00 மணிக்கு வந்து விட்டார்கள் என்றும், முத்துக்குமார் பிரேதத்தை இரவு 10.30 மணி முதல் 11.00 மணிக்குள் அமரர் ஊர்தியில் எடுத்து சென்றார்கள்

என்றும் சாட்சியம் அளித்ததிலிருந்தே சொன்ன நேரத்தில் போலீசார் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், அதற்கு முன்பாகவே சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 தனது இந்நீதிமன்ற முதல் விசாரணையில், சம்பவத்திற்கு மறுநாள் காலை 8.00 மணியளவில் புகார் மனுவில் கையொப்பம் பெறப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில், புகார் தருவதற்கு முன்பாகவே நான் பார்வை மகஜர், அத்தாட்சி, வரைபடம் ஆகியவைகளை தயாரித்ததாக வழக்கிற்காக தவறுதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

14. அ.சா.2 ஆனந்தகுமார் நீதிமன்ற விசாரணையில், தன் அண்ணன் அவராகவே வெட்டிக்கொண்டால் முதல் காயத்திலேயே ரத்தம் வந்திருந்தால் அடுத்த காயத்தை ஏற்படுத்தியிருக்க வாய்ப்பில்லை என்றும், உண்மையை கூறுமாறு ஆஜர்எதிரியை கேட்டதாகவும் மற்றும் முத்துக்குமாரின் முதுகு பகுதியில் அவராகவே காயம் ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பில்லை என்ற காரணத்தினால் அவருடைய இறப்பில் சந்தேகம் இருப்பதாக கூறி நடவடிக்கை எடுக்கும் படி அ.சா.1 புகார் கொடுத்தார் என சாட்சியமளித்துள்ளார் என்றால் என்னுடைய விசாரணையில் அவ்வாறு கூறவில்லை, அ.சா.2 என்னுடைய விசாரணையில் இறப்பில் சந்தேகம் இருப்பதாகவும், முத்துக்குமாராக காயம் ஏற்படுத்தியிருக்க வாய்ப்பில்லை என்று வாக்குமூலம் அளித்துள்ளார்.

15. அ.சா.2 ஆனந்தகுமார் நீதிமன்ற விசாரணையில், வீரசோழன் போலீசார் சம்பவ தினத்தன்று இரவு 10.00–11.00 மணிக்குள் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் நரிக்குடி போலீசாரும் வீரசோழன் போலீசாரும் இரவு 11.00 மணிக்குள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும், வந்த போலீசார் முத்துக்குமாரின் வீட்டின் இரத்தக்கறை படிந்த சுவற்றை

சுரண்டி எடுத்தார்கள் என்றும், களைக்கொத்தியை வீட்டிலிருந்து எடுத்து சென்றார்கள் என்று சாட்சியமளித்துள்ளார் என்றால் என்னுடைய விசாரணையில் அவ்வாறு கூறவில்லை.

16. அ.சா.1 நாகலட்சுமி இந்நீதிமன்ற விசாரணையில், சுமார் 4-5 போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும், வந்த போலீசார் முத்துக்குமாரின் வீட்டின் இரத்தக்கறை படிந்த சுவற்றை சுரண்டி எடுத்தார்கள் என்றும், களைக்கொத்தியை வீட்டிலிருந்து எடுத்து சென்றார்கள் என்று சாட்சியமளித்துள்ளார் என்றால் என்னுடைய விசாரணையில் அவ்வாறு கூறவில்லை.

17. அ.சா.3 சின்னபிள்ளை இந்நீதிமன்ற விசாரணையில், ஆஜர் எதிரியும் அவருடைய கணவரான முத்துக்குமாருக்கும் இடையே சண்டை ஏற்பட்டு ஒரே சத்தமாக இருந்தது என்றும், அதனால் தான் அவர் வீட்டிற்கு சென்று என்ன பிரச்சனை என்று கேட்டபோது ஆஜர் எதிரி கலா என்பவர் அவருக்கும் அவர் கணவருக்கும் இடையே குடும்ப பிரச்சனை என்றும், அதில் தான் தலையிட வேண்டாம் என்றும், வெளியே செல்லுமாறு கூறினார் என்று சாட்சியமளித்துள்ளார் என்றால் என்னுடைய விசாரணையில் அவ்வாறு கூறவில்லை.

18. அ.சா.3 சின்னபிள்ளை இந்நீதிமன்ற விசாரணையில், சம்பவ தினத்தன்னறு இரவு 8.30 மணிக்கு வீரசோழன் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும், சுமார் 4-5 போலீசார் வந்திருந்தார்கள் என்றும், தன் மகன் ஆனந்த் அவருக்கு தெரிந்த மதுரையை சேர்ந்த வழக்கறிஞரிடம் முறையிட்டதன் பேரில் தான் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும், போலீசார் சம்பவ இடத்தில் இரவு 10.00 மணி வரை இருந்தார்கள் என்றும், போலீசார் முத்துக்குமாரின் பிரேதத்தை இரவு 11.00

மணியளவில் ஆம்புலன்சில் எடுத்து சென்றார்கள் என்று சாட்சியமளித்துள்ளார் என்றால் என்னுடைய விசாரணையில் அவ்வாறு கூறவில்லை.

19. அ.சா.4 ஆனந்த் இந்நீதிமன்ற விசாரணையில், தானும் தனது தாயரான அ.சா.3 ம் முத்துக்குமார் வீட்டிற்கு சென்று, தனது தாயார் என்ன பிரச்சனை என்று கேட்டபோது ஆஜர் எதிரி கலா என்பவர் தனக்கும் தன் கணவருக்கும் இடையே குடும்ப பிரச்சனை என்றும், அதில் நாங்கள் தலையிட வேண்டாம் என்றும், வெளியே செல்லுமாறு கூறினார் என்று சாட்சியமளித்துள்ளார் என்றால் என்னுடைய விசாரணையில் அவ்வாறு கூறவில்லை.

20. நான் சொன்ன மாதிரி, நாள், நேரத்தில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர், வரைபடம் மற்றும் அத்தாட்சியை சாட்சிகள் முன்னிலையில் தயார்செய்யவில்லை என்றும், அவை அனைத்தையும் காவல் நிலையத்தில் வைத்து தயார்செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அத்தாட்சியில் கைப்பற்றிய சா.பொ.6 மற்றும் 7 யை சம்பவ இடத்திலிருந்து நான் கைப்பற்றவில்லை என்றும் வழக்கிற்காக நான் உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

21. அ.த.சா.ஆ.13 பிரேத விசாரணை அறிக்கையில், வரிசை எண் 9 ல் பின்பக்கத்தில் இறந்துபோன நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையிலும் தனக்கு தானே காயத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது என்றும், யாரோ முத்துக்குமாரை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக மரணம் விளைவிக்க கூடிய ஆயுதத்தால் தாக்கி தான் முத்துக்குமாருக்கு மரணம் ஏற்பட்டிருக்கலாம் என முதல்கட்ட விசாரணையில் தெரியவந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

22. நான் பிரேதத்தை முதன் முதலில் விருதுநகர் அரசு மருத்துவமனையில் வைத்து 24.10.2022 அன்று காலை 8.00 மணிக்கு பார்த்தேன். நான் என்னுடைய முதல் விசாரணையில் மருத்துவர் சுதன் என்பவரை 26.10.2022 அன்று காலை 9.30 மணிக்கு விசாரித்து இறந்த நபர் அவராகவே இறப்பை ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பில்லை என கூறியதன் அடிப்படையில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை தயார்செய்தேன் என்றால் சரிதான். ஆனால் அதற்கு முன்பாகவே எதன் அடிப்படையில் பிரேத விசாரணை அறிக்கையில் யாரோ முத்துக்குமாரை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக மரணம் விளைவிக்க கூடிய ஆயுதத்தால் தாக்கியதாக எவ்வாறு முடிவுக்கு வந்தேன் என்றால் பஞ்சாயத்தார்கள் வரிசை எண் 15ல் கூறியதன் அடிப்படையில் அவ்வாறு எழுதியதாக சாட்சி கூறுகிறார்.

23. பிரேத விசாரணை அறிக்கையில் வரிசை எண் 15ல் முத்துக்குமார் 23.10.2022 அன்று 20.00 மணி போல முத்துக்குமார் அதிகமாக மது குடித்து விட்டு அவர் மனைவியுடன் சண்டை போட்டுள்ளார் என்று சொல்லப்பட்டுள்ள விவரம் சரிதான். மேலும் முத்துக்குமார் மதுபோதை சிகிச்சை மையத்தில் சிகிச்சைக்கு பின்னரும் முத்துக்குமார் அதிகமாக மதுபோதை குடித்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் சண்டை சச்சரவு செய்துள்ளார், பின்னர் அவரது மனைவி கலாவிடம் மது குடித்து விட்டு சண்டை சச்சரவு செய்து வந்துள்ளார் என்று சொல்லப்பட்டுள்ள விவரம் சரிதான். நீ.ம.சா.ஆ.3 ல் இறந்த நபரின் உள்உறுப்புகளை பகுப்பாய்வு செய்ததில், Ethyl Alcohol or any other Poison was not detected என்று அறிக்கை வந்துள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.3 ற்கும் அ.த.சா.ஆ.13 க்கும் இறந்த நபர் மது அருந்தியிருந்ததாக

கூறப்படுவதில் மாறுபாடு உள்ளது என்றால் சரிதான்.

24. அ.சா.10 காளிமுத்து நீதிமன்ற விசாரணையில், அ.த.சா.ஆ.5 யை தான் எழுதவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து அந்த ஆவணம் காவலரால் எழுதப்பட்டது என்றும், அந்த ஆவணத்தில் 2ம் பக்கத்தில் கடைசியிலிருந்து இரண்டாவது வரியில் தேதி 24.10.2022 என்பதை 26.10.2022 ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சாட்சியமளித்துள்ளார் என்றால் அதனை நான் மறுக்கிறேன்.

**(நேரம் மாலை 6.20 ஆன காரணத்தினாலும் கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் சாட்சியிடம் மேலும் பல்வேறு கேள்விகள் உள்ளது என்று கூறிய காரணத்தினாலும் நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

| |
|---|
| என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.<br><br>கூடுதல் மாவட்ட நீதிபதி<br>அருப்புக்கோட்டை. |